தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1981 பிப்ரவரி, 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

“அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்”.

அவையில் வீற்றிருப்பவர்களைக் கொண்டு அந்த அவையின் தன்மை இன்னதுதான் என்று கண்டறிந்து கொள்ளாதவர், சொற்களைப் பேசத் தொடங்குதல் சொல்ல வேண்டிய வகை முறையினையும் சொற்களையும் அறியாதவரல்லாமல் அத்துறையின் திறமை இல்லாதவருமாவார்.

I. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மேல்நிலைப்பள்ளி நூலகங்களுக்கு நூலகர்கள் நியமனம்.

*வினா எண் 164— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேல்நிலைப்பள்ளிகளின் நூலகங்களைப் பராமரிக்க பட்டம் பெற்ற நூலகர்களை அமர்த்தும் எண்ணம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்தக்கல்வி ஆண்டில் அதை நடைமுறை படுத்தும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை. பகுதி நேர நூலகர்கள் நியமித்துக்கொள்ள ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள நூலகங்களை நல்ல முறையில் செயல்படுத்தவும் அதிலே படித்திருக்கிற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும் முழுநேர நூலகர்களை நியமிக்க அரசாங்கம் இனிமேலாவது முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது மேல்நிலைப் பள்ளிகளில் இருக்கின்ற நூலகங்களே, முன்னாலே உயர்நிலைப்பள்ளிகளில் இருந்த நூலகங்கள்தான், அவைகளிலே மேற்கொண்டு சில புத்தகங்களை வாங்கி வைத்து, அந்த நூலகங்களைக் கொஞ்சம் அதிகமாக புத்தகங்கள் உடைய வைகளாக ஆக்கியிருக்கிறோம். இந்த நூலகங்களை மாணவர்கள் பயன்படுத்த பகுதி நேர ஊழியர் ஒருவரை நியமித்துப் கொள்ள இப்போது ஆணை வழங்கப்பட்டுள்ளது. அவர் அந்தக் பள்ளியிலே பணியாற்றும் ஆசிரியர் என்றால் மாதம் 25 ரூபாயும் வெளியிலே உள்ள ஒருவராக இருந்தால் மாதம் 50 ரூபாயும் வழங்கலாம் என்ற உத்திரவைத் தந்திருக்கிறோம். இன்றைய நிலையில் இந்தப் பகுதி நேர ஊழியர்களே போதும் என்று அரசு கருதுகிறது.

அண்ணா எழுதிய புத்தகங்கள்

*வினா எண் 165— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : "அண்ணா எழுதிய புத்தகங்களை மலிவு விலையில் அரசு வெளியிடும் உத்தேசம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை."

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சென்னையிலுள்ள ஒரு புத்தக நிறுவனம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூல்களை அதிகமான விலைக்கு விற்பனை செய்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தைத்தடை செய்து, பாரதியார் நூல்களை தேசியமயமாக்கி குறைந்த விலையில் அனைவரும் வாங்கிப் படிக்க வகை செய்திருப்பதைப்போல தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நூல்களையும் தேசியமயமாக்கி, ஏழை எளிய மக்களும் அவைகளை வாங்கிப் படிக்கின்ற வகையில் குறைந்த விலையில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, புத்தக நிறுவனத்தார் அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள் என்றால் அவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலையில் விற்கிறார்கள். இப்போது இருக்கிற பிரச்சனை மலிவு விலையில் அரசு அண்ணாவின் நூல்களை வெளியிடுமா என்பது. அந்தக் கருத்து தற்போது ஆய்வில் இல்லை என்று சொன்னேன். மற்றப்படி புத்தக நிறுவனத்தாரின் உரிமையைத் தடைசெய்து, அந்த உரிமையை அரசாங்கம் பெறுவதற்கு இந்த அரசுக்கு அதிகாரம் இல்லை.